# பொதுக்காலத்தின் இருபத்தொன்றாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-08-25

*(இன்றைய வாசகங்கள்:*

*யோசுவா நூலிலிருந்து வாசகம்.* 24:1-2,15-18,

*பதிலுரைப்பாடல் திபா:* 34: 1-2, 15-22,

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்.* 5:21–32,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 6: 60-69)

*திருப்பலி முன்னுரை*

*ஆண்டவருக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தொன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நிலைவாழ்வு தரும் இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு, உண்மை கடவுளுக்கு பணிந்து வாழவும், பணிவிடை செய்யவும் நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப வாழாமல், தூய ஆவியாரின் வழிநடத்துதலின்படி கடவுளின் மாட்சியை வெளிப்படுத்துபவர்களாய் வாழ நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும், அவரோடு ஒன்றித்த வாழ்வு வாழ்ந்து நிலைவாழ்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். பேதுருவைப் போல ஆண்டவர் இயேசுவின் நிலைவாழ்வு தரும் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அனைத்திற்கும் முதலான இறைவா!*

*எம் திருஅவையிலுள்ள அனைத்து ஊழியர்களும் பகிர்தல் என்ற தன்னலமற்ற தொண்டுள்ளத்தோடு, உம் உண்மைச் சீடர்களாய் வாழ்ந்திட வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நிலை வாழ்வே இறைவா!*

*சமுதாய, சமய அநியாயங்களைக் கண்டு ஒதுங்கி ஓடாமல் ஆண்டவரையே வழிபடுவோம் என்ற யோசுவாவைப் போல நாங்களும் இயேசுவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்களாய் வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வார்த்தையான இறைவா!*

*இறைவார்த்தையை வாசித்து இறைவார்த்தைக்குச் செவிகொடுத்து, உண்மையான உயிருள்ள வார்த்தையாய் வாழ்ந்து நிலைவாழ்வு பெற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பே உருவான இறைவா!*

*கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் மீட்படைவர் என்றும் உண்மையை உணர்த்தும் தூய ஆவியாரின் அருளைப் பெற்று வாழ வேண்டுமென்றும் மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*நம்மை அன்றாடம் வழிநடத்துபவர் இயேசுவே என்ற உண்மையை ஏற்றுக் கொள்கின்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் திருஅவையை விட்டு விலகிச் செல்லாமல் நிறையுள்ளவர்களாக வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

விடுதலை தருபவராம் இறைவா,

தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற் றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.